# பதிவு/மீள்பதிவு செய்தல் பற்றிய

# **அறிவுறுத்தல் கையேடு**

## உள்ளடக்கம்


பதிவு∃மீள்பதிவு செய்தல் பற்றிய அறிவுறுத்தல்கள்.........................................................18

1.1 பொது.....................................................................................................18

1.1.1 முற்தேவைகள்......................................................................................18

1.1.1.1 புதிய சந்தாதாரர்கள்............................................................................18

1.1.1.2 தற்போதைய சந்தாதாரர்கள்..................................................................18

1.1.2 செயல்முறை...........................................................................................19

1.2 புகைப்படம்..............................................................................................19

1.2.1 வாடிக்கையாளர் ஒப்படைக்கும் புகைப்படம்..................................................19

1.2.2 தன்னை புகைப்படமெடுக்க விரும்பும் வாடிக்கையாளர்.........................................20

1.2.3 புகைப்படமெடுப்பதற்கான படிமுறைகள்........................................................20

1.2.4 MMS மூலம் புகைப்படம் அனுப்பும்போது முக்கியமாக கவனிக்கவேண்டியவை..........................21

1.3 பதிவு∃மீள்பதிவுப் படிவத்தை நிரப்புவதற்கான அறிவுறுத்தல்கள் - முற்கொடுப்பனவு..........................22

1.4 பதிவு∃மீள்பதிவுப் படிவத்தை நிரப்புவதற்கான அறிவுறுத்தல்கள் - பிற்கொடுப்பனவு..........................23

பின்னிணைப்பு 1.........................................................................................................26
பதிவு∃மீள்பதிவுச் செயல்முறைக்கான பாய்ச்சற்படம் (Flow Chart)...............................................26

பின்னிணைப்பு 2.........................................................................................................27
அடிக்கடி எழுப்பப்படும் வினாக்கள் (FAQs)..............................................................27

பின்னிணைப்பு 3.........................................................................................................30
முற்கொடுப்பனவு பதிவு∃மீள்பதிவு விண்ணப்பப்படிவத்தின் மாதிரி.......................................................30

பின்னிணைப்பு 4.........................................................................................................31
பிற்கொடுப்பனவு பதிவு∃மீள்பதிவு விண்ணப்பப்படிவத்தின் மாதிரி.......................................................31

## பதிவு/மீள்பதிவு செய்தல் பற்றிய அறிவுறுத்தல்கள்

### 1.1 பொது

கையடக்கத்தொலைபேசி சந்தாதாரர்கள் அனைவரும் தமது வலையமைப்புடன் பதிவு செய்து, பாதுகாப்பு படையினர் அல்லது பொலீஸ் உத்தியோகத்தர்கள் கேட்டுக் கொள்ளுமிடத்து, தம்வசம் உள்ள SIM (சந்தாதாரர் அடையாளக்கூற்று)க்கு தாமே உரிமையாளர் என்பதை நிரூபிக்க வேண்டும் என்று இலங்கைத் தொலைத்தொடர்பாடல் ஒழுங்குறுத்து ஆணைக்குழு (TRCSL) பணிப்புரை விடுத்துள்ளது.

மேற்படி அறிவுறுத்தல்களுக்கு அமைவாக மொபிடெல்(தனியார்)லிமிடெட் அதன் புதிய மற்றும் தற்போதைய சந்தாதாரர்களை பதிவுசெய்யவுள்ளது. இச் செயல்முறையின்போது பின்வரும் வழிகாட்டல்கள் உறுதியாக கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

### 1.1.1 முற்தேவைகள்

(தற்போதைய மற்றும் புதிய) சந்தாதாரர்கள் அனைவரும் பதிவு செய்தல் இடம்பெறும்போது குறிப்பிட்ட நிலையங்களில் நேரில் பிரசன்னமாயிருத்தல் வேண்டும். பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஒரு சிறுவனுக்கு/சிறுமிக்கு மொபிடெல் இணைப்பைப் பெறவிரும்பினால் அந்த சிறுவன்/சிறுமியுடன் சேர்ந்து வரவேண்டியது அவசியம்.

#### 1.1.1.1 புதிய சந்தாதாரர்கள்

நேரில் பிரசன்னமாக இருக்கவேண்டிய புதிய சந்தாதாரர் பின்வரும் ஆவணங்களை எடுத்துவர வேண்டும்:

1) தேசிய அடையாள அட்டை /இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம் / செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.
2) வாடிக்கையாளர் எமது நிலையத்திற்கு புகைப்படமெடுக்க தயாராக வருதல் வேண்டும். விரும்பாவிடின் கடவுச்சீட்டு விவரக்கூற்றினை அனுசரித்து சமீபத்திய கடவுச்சீட்டு அளவிலான புகைப்படம் ஒன்றை கொண்டு வரவேண்டும்.
3) பிற்கொடுப்பனவு இணைப்புகள் அல்லது பிற்கொடுப்பனவு அகன்றபட்டை மட்டுக்குமேயான விவரப்பட்டியற் சான்று.
4) கம்பனிக் கடிதத்துடன் கம்பனிப் பெயரின் கீழ் இணைப்புகளுக்கான வியாபாரப் பதிவின் பிரதி.

#### 1.1.1.2 தற்போதைய சந்தாதாரர்கள்

தற்போதைய சந்தாதாரர்கள் மேல் அட்டவணைப்படுத்தப்பட்ட (1-4) ஆவணங்களுடன் நேரில் வந்து பதிவுசெய்ய விரும்பும் தம்வசமுள்ள மொபிடெல் SIM-ஐ/SIM-களையும் காண்பிக்க வேண்டும்.

1.1.2 செயல்முறை

- பதிவு/மீள்பதிவுப் படிவத்தை நிரப்புமாறு சந்தாதாரருக்கு அறிவுறுத்துவதோடு நிலையத்தில் எடுத்துக்கொண்ட டிஜிடல் புகைப்படத்தை MMS மூலம் அனுப்புக, அல்லது வாடிக்கையாளர் சமர்ப்பித்த புகைப்படத்தை பதிவு/மீள்பதிவுப் படிவத்துடன் இணைத்துவிடுக.

- தற்காலிக மொபிடெல் அடையாள சான்றிதழை (MIC) நிரப்பி சந்தாதாரரிடம் கையளியுங்கள். அத்துடன் நிரந்தர மொபிடெல் அடையாள சான்றிதழ், அவரது பதிவு செய்யப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுமென்றும் அறிவிக்கவும்.

**குறிப்பு;** முகவர்/உபமுகவர்/சில்லறை வியாபாரி/வாடிக்கையாளர் சேவை அதிகாரிக்கு வழங்கப்படும் தற்காலிக அடையாள அட்டைகளுக்கு அவர்களே பொருப்பானவர்கள். பதிவு/மீள்பதிவுக்கு பின்னர் அவர்களிடம் மீதமுள்ள அட்டைகள் கணிப்பிடப்படும்.

- பதிவு வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டபின், அதனை உறுதிப்படுத்தும் செய்தி அனுப்பி வைக்கப்படுமென்றும் SIM பதிவு விவரங்கள் #132# -ஐ டயல் செய்யும்போது மொபிடெல் டிஜிடல் சான்றிதழின் (MDC) உருவில் எந்நேரமும் தொலைபேசியில் கிடைக்குமென்றும் வாடிக்கையாளருக்கு அறிவிக்கவும்.

1.2 புகைப்படம்

வாடிக்கையாளர் எமது நிலையத்தில் புகைப்படமெடுக்கலாம், அல்லது அவர் புகைப்படமொன்றை சமர்ப்பிக்கவும் முடியும். இது பற்றிய அறிவுறுத்தல்களை இங்கு காணலாம்.

**1.2.1 வாடிக்கையாளர் ஒப்படைக்கும் புகைப்படம்**

வாடிக்கையாளர் புகைப்படமொன்றை சமர்ப்பிப்பதாயின் அப்படம் பின்வரும் விவரக்கூற்றுக்கு அமைவாக இருத்தல் வேண்டும் :

1) புகைப்படம் 3.5 செ.மி. X 4.5 செ.மி. அளவில் இருத்தல் வேண்டும்.
2) இணைப்பை பதிவு செய்வதற்கென புகைப்படம் சமர்ப்பிக்கப்படும் திகதிக்கு முந்திய மூன்று மாதத்திற்கு முன்னர் அது எடுக்கப்பட்டிருத்தலாகாது.
3) புகைப்படம் கடவுச்சீட்டுக்கு அமைவாக எடுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**இணைப்பை இயக்குவதற்கு, புகைப்படமொன்றை எடுத்து குறுகிய குறியீடு 33333-க்கு MMS -ஐ அல்லது reg@mobitel.lk க்கு அனுப்பவும்.**

MMS -இல் உள்ள விடயம், இயக்கி வைக்கவும் இடம்பெறவிருக்கும் ஏதேனும் தரவை இற்றைப்படுத்தவும் பின்வரும் தோற்றத்தில் இருத்தல் வேண்டும்.

**மொபிடெல் இலக்கம் - தே.அ.அ இலக்கம்**

ஊம் : 071234567 - 8111111111V

### 1.2.2 புகைப்படமெடுக்க விரும்பும் வாடிக்கையாளர்

வாடிக்கையாளரை புகைப்படமெடுக்கும் பொழுது பின்வருவனவற்றுக்கு அமைவாக எடுக்கப்பட வேண்டும்:

1)வாடிக்கையாளரின் முகம் கமராவை நேருக்கு நேராக நோக்குவதாக காணப்பட வேண்டும். காதுகள் கண்ணுக்கு புலப்படக்கூடியவையாக இருத்தல் வேண்டும்.

2)வாடிக்கையாளர் தொப்பியையோ, வர்ணக் கண்ணாடியையோ, முகத்தை மறைக்கக்கூடிய வேறு எதனையுமோ அணிந்திருத்தல் கூடாது.

3)படம் எடுக்கும்போது பின்னணி வெள்ளையாக/லேசான வர்ணத்தில் இருத்தல் வேண்டும்.

வாடிக்கையாளரை புகைப்படமெடுப்பதற்கு தேவையானவை பின்வருமாறு:

- முற்கொடுப்பனவு இணைப்பை இயக்கும்பொழுது இயக்குவதற்கு பயன்படுத்தப்படும் தொலைபேசி (3G விரும்பத்தக்கது). MMS-க்கு ஏற்றதாக இருத்தல்வேண்டும் என்பதோடு, கமரா உள்ளடக்கப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.
- எமது வாடிக்கையாளர்கள் 0712755777 என்ற துரித மார்க்கத்தை தொடர்பு கொண்டு MMS அமைப்புகளை இயக்கலாம்.
- முகவர் அல்லது உப முகவரால் இயக்கப்படுவதற்கு பயன்படுத்தப்படும் அதே இலக்கத்தை உபயோகித்தே MMS அனுப்பப்பட வேண்டும்.
- வெளிச்சவளம் நன்றாக இருத்தல் வேண்டும்.

புகைப்படம் எடுத்து முடிப்பதற்கு சுமார் இரு நிமிடங்கள் மட்டுமே போதுமானதாகும்.

### 1.2.3 புகைப்படமெடுப்பதற்கான படிமுறைகள்

**படிமுறை** 1 : கமராவை முடுக்கிவிடுக

கமரா பொத்தானை அடையாளம் கண்டு, அதனை இயக்குக. கமரா Mode-இல் இருப்பதை உறுதி செய்க (வீடியோ Mode-இல் அல்ல).

**படிமுறை** 2 : தெளிவுத்திறனை (Resolution) தெரிவு செய்க.

அடுத்து, நீங்கள் கமராவின் தெளிவுத்திறனை தெரிவு செய்தல் வேண்டும். தேர்வுகளை (Options) தெரிவு செய்து, பின் தெளிவுத்திறனை தெரிவு செய்வதன் மூலம் எந்தவொரு கையடக்கத் தொலைபேசியிலும் இதைச் செய்வது சுலபம். தெளிவுத்திறன் இலக்கமாகவோ அல்லது தரம் கூடிய அல்லது குறைந்ததெனவோ அட்டவணைப்படுத்தப்பட்டதாக இருக்கும். நீங்கள் இலக்கத் தேர்வைக் கொண்டிருந்தால் குறைந்த அல்லது நடுத்தர இலக்கத்தை தெரிவு செய்வது சிறந்ததாகும்.

**படிமுறை 3** : வெளிச்சவளத்தை அடையாளம் காண்க
புகைப்படமெடுக்க வாடிக்கையாளர் தயாராகிவிட்டால், வெளிச்ச தேர்வுகள் பற்றி நீங்கள் தீர்மானிக்க வேண்டும். முடியுமானபோது சிறப்பான வெளிச்சவளத்தை அடையாளம் கண்டு, அதற்கு எதிர்ப்புறமாக நின்று படம் எடுத்தல் வேண்டும். அப்போது கமரா லென்ஸ் பிரகாசமின்றியிருப்பதை உறுதி செய்க.

**படிமுறை 4** : தொலைபேசியை அசைவற்றதாக வைத்திருங்கள்
நீங்கள் படமெடுக்க முயலும்போது உங்கள் கையிலுள்ள கமராவை அதிக அசைவின்றி இருக்கத்தக்கதாக வைத்திருத்தல் வேண்டும். அருகே ஸ்திரமான பொருளிருக்குமாயின் அதை கவனத்தில் கொண்டு உங்களை நீங்கள் மேலும் ஸ்திரப்படுத்திக் கொள்ளுங்கள்.

**படிமுறை 5** : இறுதி உருவச் சீராக்கல்
நீங்கள் படமெடுக்க எத்தனிக்கும் திரையில் உருவத்தை நோக்கி, நீங்கள் மேலும் சீராக்கங்களை மேற்கொள்ள விரும்பின், கையடக்கத் தொலைபேசி மீது கமரா பிரயோகத்தில் தேர்வுகளை (Options) பெறுவழி மூலம் பெற்று நிர்ணயிக்கவும்.

**படிமுறை 6** : இணைப்பை இயக்குவதற்கு குறுகிய குறியீடு 33333-க்கு MMS -ஐ அல்லது reg@mobitel.lk க்கு அனுப்பவும்.
MMS -இல் உள்ள விடயம், இயக்கி வைக்கவும் இடம்பெறவிருக்கும் ஏதேனும் தரவை இற்றைப்படுத்தவும் பின்வரும் தோற்றத்தில் இருத்தல் வேண்டும்.
மொபிடெல் இலக்கம் - தே.அ.அ இலக்கம்
உ+ம் : 071234567 - 8111111111V

### 1.2.4 MMS மூலம் புகைப்படம் அனுப்பும்போது முக்கியமாக கவனிக்கவேண்டியவை

- MMSஇன் Subject பகுதியில் முழுமையான மெபிடெல் இலக்கத்தையும் தேசிய அடையாள அட்டை இலக்கத்தையும் குறிப்பிடுக.
- மேலே படிமுறை 6 ல் குறிப்பிட்டவாறு MMS அமைப்பு சரியாக இருக்காவிடின் அவ் MMS நிராகரிக்கப்படும். இது SMS மூலம் அறிவுருத்தப்படும்.
- MMS இன் அளவு 100kB ஐ விட குறைவாயிருத்தல் வேண்டும்.

## 1.3 பதிவு/மீள்பதிவு படிவத்தை நிரப்புவதற்கான அறிவுறுத்தல்கள் - முற்கொடுப்பனவு

(பின்னிணைப்பு 3-ஐ பார்க்கவும்)

- விண்ணப்ப படிவத்தை கும்மிழ் முனைப்பேனாவினால் மட்டுமே நிரப்ப வேண்டும்.
- விண்ணப்ப படிவத்தை நிரப்பும் போது ஒதுக்கப்பட்ட ஒவ்வொரு சதுர அடைப்புக்குள்ளும் தனித்தனி எழுத்தில் நிரப்பவும். சொற்களுக்கு/பெயர்களுக்கு இடையே இடமிருந்தால், ஒரு சதுர அடைப்பை நிரப்பாமல் விட்டு, பின்னர் தொடரவும்.
- புகைப்படம் : புகைப்படத்தை பசையிட்டு ஒட்டவும். படத்தை பொருத்தலாகாது.

பதிவு/மீள்பதிவு படிவத்தில் கோரப்பட்டிருக்கும் தகவல்களை நிரப்புவதற்கு பின்வரும் அறிவுருத்தல்களை பின்பற்றவும்:

- **இலக்கம்** 1 : வாடிக்கையாளரின் மரியாதைக்குரிய சொல்லில் சிறு கோடிடவேண்டும்.
- **இலக்கம்** 1 : தேசிய அடையாள அட்டையில்/ செல்லுபடியாகும் கடவுச்சீட்டில்/ இலங்கை சாரதி அனுமதிப்பத்திரத்தில் உள்ளபடி பெயரை எழுதவும். கடவுச்சீட்டாகில், நாடு எது என்பதை குறிப்பிடவும்.
- **இலக்கம்** 2 : விண்ணப்பப் படிவத்தில் ஒப்பமிடுபவரின் தேசிய அடையாள அட்டை இலக்கம் /கடவுச்சீட்டிலக்கத்தை ஒவ்வொரு சதுரஅடைப்பிலும் தெளிவாக ஒவ்வொன்றாக எழுத வேண்டும்.
- **இலக்கம்** 3 : சிறுவனால் /சிறுமியினால் இணைப்பு பயன்படுத்தப்படுமாயின், அல்லது பயன்படுத்தப்படவிருக்குமாயின் (செல்லுபடியாகும் அடையாள அட்டை இல்லாத ஒரு மைனர்) பெயரைக் குறிப்பிடவும். கம்பனியாயின் பெயரைக் குறிப்பிடவும்.
- **இலக்கம்** 4 : உள்ளூர் முகவரியே நிரந்தர முகவரியாக இருத்தல் வேண்டும். அது வாடிக்கையாளருடன் தபாலில் தொடர்பு கொள்ளக்கூடியதாக இருத்தல் வேண்டும். (நிரந்தர மொபிடெல் அடையாள அட்டை (MIC) இம் முகவரிக்கே தபாலில் அனுப்பப்படும்)
- **இலக்கம்** 5 : விண்ணப்பதாரர் தற்பொழுது தொழில் செய்யும் பிரிவை குறிப்பிடவும்.
- **இலக்கம்** 6 : விண்ணப்பதாரர் மாதம் ஒன்றில் தொடர்பாடலுக்கு ஒதுக்கக்கூடிய சராசரித்தொகை. சதுர அடைப்பின் கீழ் கோடிட்டுக் குறியிடவும்.
- **இலக்கம்** 7 : குடும்பத்தில் கையடக்கத்தொலைபேசிப் பாவனையாளர்களின் எண்ணிக்கையையும், அக் குடும்ப அங்கத்தவர்களின் மொத்த எண்ணிக்கையையும் இலக்கத்தில் நிரப்பவும்.
- **இலக்கம்** 8 : விண்ணப்பதாரர் மொபிடெல்லுடன் தொடர்புகொள்ள விரும்பும் மொழியை குறிப்பிடவும் - கடிதங்கள், தொலைபேசி முதலியவை.

- **இலக்கம்** 9 : SIM அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, வாடிக்கையாளருக்கு ஒதுக்கப்பட்டுள்ள மொபிடெல் இலக்கத்தை தெளிவாக எழுதவும்.
- **இலக்கம்** 10 : SIM அட்டையின் பிற்புறத்தில் காணப்படும் 19 டிஜிட் SIM அட்டை இலக்கம் இங்கு நிரப்பப்பட வேண்டும்.
- **இலக்கம்** 11 : வாடிக்கையாளருக்கு வழங்கப்படவிருக்கும் தற்காலிக MIC -இன் தொடர் இலக்கத்தை நிரப்பவும்.
- **இலக்கம் 12,13,14,15,16,17,18** ஆகியவற்றை மொபிடெல் விற்பனையாளர் மட்டுமே நிரப்ப வேண்டும்.
- **இலக்கம்** 12 : 12 -இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுள் ஒன்றை நீங்கள் சரிபார்க்க வேண்டும். விடை "இல்லை" எனில் அவ்விண்ணப்பத்தை மொபிடெல் நிராகரித்துவிடும்.
- **இலக்கம்** 13 : வாடிக்கையாளரின் புகைப்படத்தை நீங்கள் எமது நிலையத்தில் எடுத்திருந்தால் அதை உரியவாறு குறிப்பிடவும்.
- **இலக்கம்** 14 : எடுக்கப்பட்ட புகைப்படத்துடன், அல்லது விண்ணப்பத்தில் இணைக்கப்பட்டுள்ள புகைப்படத்துடன் வாடிக்கையாளரின் முகம் ஒத்துப்போகின்றதா என்பதை நீங்கள் கவனித்தல் வேண்டும். அது ஒத்துப் போகாமல் இருப்பின் அவ்விண்ணப்பத்தை மொபிடெல் நிராகரித்துவிடும்.
- **இலக்கம்** 15 : பெயர் மற்றும் முகவரி உள்ள உப முகவர்/முகவர் மொபிடெல் நிலைய முத்திரையை இடவும். முத்திரை இல்லாதவிடத்து, விவரங்கள் நிரப்பப்படல் வேண்டும்.
- **இலக்கம்** 16 : நீங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட முகவரின் குறியீட்டைக் கொண்டு நிரப்பவும்.
- **இலக்கம்** 17 : உங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள உபமுகவரின் குறியீட்டை கொண்டு நிரப்பவும்.
- **இலக்கம்** 18 : MMS மூலம் இணைப்பை இயக்குவதற்கு பயன்படுத்தப்பட்ட இலக்கத்தைக்கொண்டு நிரப்பவும்.
- **இலக்கம்** 19 : விற்பனையாளரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை இங்கு குறிப்பிடவும்.

### 1.4 பதிவு/மீள்பதிவு படிவத்தை நிரப்புவதற்கான அறிவுறுத்தல்கள் - பிற்கொடுப்பனவு

**(பின்னிணைப்பு 4-ஐ பார்க்கவும்)**

- விண்ணப்பப் படிவத்தை குமிழ் முனைப் பேனாவினால் மட்டுமே நிரப்ப வேண்டும்.
- விண்ணப்பப் படிவத்தை நிரப்பும்போது ஒதுக்கப்பட்ட ஒவ்வொரு சதுர அடைப்புக்குள்ளும் தனித்தனி எழுத்தால் நிரப்பவும்.சொற்களுக்கு/பெயர்களுக்கு இடையே இடமிருந்தால் ஒரு சதுரஅடைப்பை நிரப்பாமல் விட்டு, பின்னர் தொடரவும்.

- புகைப்படம் : புகைப்படத்தை பசையிட்டு ஒட்டவும். படத்தை பொருத்தலாகாது.

பதிவு/மீள்பதிவு படிவத்தில் கோரப்பட்டிருக்கும் தகவல்களை நிரப்புவதற்கு பின்வரும் அறிவுருத்தல்களை பின்பற்றவும்:

- **இலக்கம்** 1 : வாடிக்கையாளரின் மரியாதைக்குரிய சொல்லில் சிறு கோடிட்டுக் குறியிடவும்.
- **இலக்கம்** 2 : முதலெழுத்துக்களுடன் பெயரை எழுதுங்கள்.
- **இலக்கம்** 3 : தேசிய அடையாள அட்டையில்/ செல்லுபடியாகும் கடவுச்சீட்டில்/ இலங்கை சாரதி அனுமதிப்பத்திரத்தில் உள்ளபடி பெயரை எழுதவும். கடவுச்சீட்டாகில், நாடு எது என்பதை குறிப்பிடவும்.
- **இலக்கம்** 4 : விண்ணப்பப் படிவத்தில் ஒப்பமிடுபவரின் தேசிய அடையாள அட்டையின்/ கடவுச்சீட்டின் இலக்கத்தை ஒவ்வொரு சதுர அடைப்பிலும் ஒவ்வொரு இலக்கத்தை தெளிவாக எழுத வேண்டும்.
- **இலக்கம்** 5 : உங்கள் அறவீட்டுப் பட்டியல்களைப் பெற வேண்டிய வாடிக்கையாளரின் முகவரி தெளிவாக குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.
- **இலக்கம்** 6 : அறவீட்டுப் பட்டியலை அனுப்பும் முகவரியுடன் நிரந்தர முகவரி வேறுபட்டதாக இருப்பின், அதனை இங்கே குறிப்பிடுக.
- **இலக்கம்** 7 : பாவனையாளரைத் தொடர்பு கொள்ளக்கூடிய இலக்கத்தை இங்கே குறிப்பிடுக. இது வீடு, அலுவலகம், தொலைநகல் அல்லது மின்னஞ்சல் - இவற்றுள் ஒன்றானால் விரும்பத்தக்கது.
- **இலக்கம்** 8 : பாவனையாளரைத் தொடர்புகொள்ள முடியாவிடின், தொடர்பு கொள்ள முடியுமானவரின் பெயரையும் இலக்கத்தையும் குறிப்பிடுக.
- **இலக்கம்** 9 : விண்ணப்பதாரியுடன் மொபிடெல் தொடர்பு கொள்வதற்கு வாடிக்கையாளர் விரும்பும் மொழியை குறிப்பிடுக - கடிதங்கள், தொலைபேசி முதலியவை.
- **இலக்கம்** 10 : கம்பனியின் கீழ் இணைப்பு பதிவு செய்யப்பட வேண்டுமாயின், வியாபாரப் பதிவில் (BRC) குறிப்பிடப்பட்ட பெயர் இங்கு தரப்பட வேண்டும்.
- **இலக்கம்** 11 : பயன்படுத்துநர் பதிவு செய்யப்பட்ட உரிமையாளரைவிட வேறோருவராக இருப்பின் (உப இணைப்புகள் இணைப்பு சிறுவர் விடயங்களில்) பெயர், தேசிய அடையாள அட்டை மற்றும் முகவரியும் இங்கு தரப்பட வேண்டும்.
- **இலக்கம்** 12 : வாடிக்கையாளருக்கு ஒதுக்கப்படும் SIM அட்டையில் தரப்பட்டிருக்கும் மொபிடெல் இலக்கம் இங்கு தெளிவாக எழுதப்பட வேண்டும். கணக்கு இலக்கம் (account number) மற்றும் குழு அடையாலம் (group code) மொபிடெல்லினால் நிரப்பப்படும்.
- **இலக்கம்** 13 : SIM அட்டையின் பின்புறத்தில் காணப்படும் 19 டிஜிட் SIM அட்டையின் இலக்கத்தை இங்கு தரவும்.

- **இலக்கம்** 14 : வாடிக்கையாளருக்கு வழங்கப்படவிருக்கும் தற்காலிக MIC -இன் தொடர் இலக்கத்தை நிரப்பவும்.
- **இலக்கம்** 15 : பயன்படுத்துநர் குரல்வழி/வீடியோ வசதிகளை பெற விரும்பினால் அதை கோடிட்டு கட்டண வீதத் திட்டத்தை குறிப்பிடுக.
- **இலக்கம்** 16 : பயன்படுத்துநர் அகன்றபட்டை சேவையைப் பெற விரும்பினால் அதை கோடிட்டு கட்டண வீதத் திட்டத்தை குறிப்பிடுக.
- **இலக்கம்** 17 : கணக்கு வைத்திருப்பவரினால் விரும்பப்படும் கொடுப்பனவுத் தேர்வை இங்கு குறிப்பிடுக.
- **இலக்கம்** 18 : இணைப்பு வைப்புத் தொகை/IDD வைப்புத் தொகையின் பெறுமதியையும் பற்றுச்சீட்டு இலக்கங்களையும் இங்கு குறிப்பிடுக.
- **இலக்கம்** 19 : விண்ணப்பதாரர் மாதம் ஒன்றில் தொடர்பாடலுக்கு ஒதுக்கக்கூடிய சராசரித்தொகை. சதுர அடைப்பின் கீழ் கோடிட்டுக் குறியிடவும்.
- **இலக்கம்** 20 : விண்ணப்பதாரர் தற்பொழுது தொழில் செய்யும் பிரிவை குறிப்பிடவும். சந்தாதாரர் வியாபார அட்டையை (Business card) வைத்திருப்பாரானால் அது இணைக்கப்படல் வேண்டும்.
- **இலக்கம்** 21 : தொழின்மை அமைப்பில் நீங்கள் ஓர் உறுப்பினராயின் அது பற்றி விவரம் தருக.
- **இலக்கம்** 22 : குடும்பத்தின் கையடக்கத்தொலைபேசி பயன்படுத்துநர்களின் எண்ணிக்கை மற்றும் குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை முதலிய விவரங்களை இலக்கங்களில் தருக.
- **இலக்கம்** 23 : 12 -இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுள் ஒன்றை நீங்கள் சரிபார்க்க வேண்டும். விடை "இல்லை" எனில் அவ்விண்ணப்பத்தை மொபிடெல் நிராகரித்துவிடும்.
- **இலக்கம்** 24 : வாடிக்கையாளரின் புகைப்படத்தை நீங்கள் எமது நிலையத்தில் எடுத்திருந்தால் அதை உரியவாறு குறிப்பிடவும்.
- **இலக்கம்** 25 : எடுக்கப்பட்ட படத்துடன், அல்லது விண்ணப்பத்தில் இணைக்கப்பட்டுள்ள புகைப்படத்துடன் வாடிக்கையாளரின் முகம் ஒத்துப்போகின்றதா என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும். அது ஒத்துப் போகாதிருப்பின் அவ் விண்ணப்பத்தை மொபிடெல் நிராகரித்துவிடும்.
- **இலக்கம்** 26 : பெயர் மற்றும் முகவரி கொண்ட உப முகவர்/முகவர்/மொபிடெல் நிலைய முத்திரையை இடவும். முத்திரை இல்லாதவிடத்து, விவரங்கள் நிரப்பப்பட வேண்டும்.
- **இலக்கம்** 27 : விற்பனையாளரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை இங்கு குறிப்பிடவும்.

## பின்னிணைப்பு 1

## பதிவு/மீள்பதிவுச் செயல்முறைக்கான பாய்ச்சற்படம் (Flow Chart)




# பின்னிணைப்பு 2

## <u>அடிக்கடி எழுப்பப்படும் வினாக்கள் (FAQs)</u>

<u>பொது</u>

1. நான் பதிவு செய்ய வேண்டிய தேவை என்ன?

கையடக்க தொலைபேசி சந்தாதாரர்கள் அனைவரும் தத்தமது வலையமைப்புடன் பதிவு செய்து கொள்ளல் வேண்டுமென்றும், பாதுகாப்பு படையினரால் அல்லது பொலீஸ் உத்தியோகத்தர்களினால் வேண்டப்படுமிடத்து அவர்கள் தம்வசமுள்ள SIM-இன் உரிமையை நிரூபிக்க வேண்டும் என்றும் இலங்கைத் தொலைத்தொடர்பாடல் ஒழுங்குறுத்து ஆணைக்குழு பணிப்புரை விடுத்துள்ளது.

2. பதிவு/மீள் பதிவு செய்வதற்கு நான் கொடுப்பனவு செய்ய வேண்டுமா ?

இல்லை

## செயல்முறை

பதிவு / மீள்பதிவு செய்ய நான் எவற்றைக் கொண்டுவர வேண்டும்?

நீங்கள் ஒரு புதிய சந்தாதாரராகவிருப்பின் பின்வரும் ஆவணங்களை கொண்டு வரவேண்டும்.

அ) தேசிய அடையாள அட்டை /இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம் / செல்லுபடியாகும் கடவுச்சீட்டு

ஆ) வாடிக்கையாளர் எமது நிலையத்தில் புகைப்படமெடுக்க விரும்பாவிடின் கடவுச்சீட்டு விவரக்கூற்றினை அனுசரித்து (3.5 செ.மி. X 4.5 செ.மி.) சமீபத்திய கடவுச்சீட்டு அளவிலான புகைப்படம்.

இ) பிற்கொடுப்பனவு குரல்வழி தொடர்புகளுக்கான அல்லது அகன்றபட்டைத் தொடர்புகளுக்கான அறவீட்டுப் பட்டியலின் உறுதிச் சான்று.

ஈ) கம்பனிக்கான தொடர்புகளுகளாயின் கம்பனியின் கடிதம்.

3. தற்பொழுது நீங்கள் சந்தாதாரராக இருப்பின் பின்வருவனவற்றை நீங்கள் எடுத்துவர வேண்டும்.

1) உங்கள் வசமுள்ள மொபிடெல் SIM/SIMகள்
2) தேசிய அடையாள அட்டை/இலங்கை வாகன சாரதி அனுமதிப்பத்திரம்/ செல்லுபடியாகும் கடவுச்சீட்டின் பிரதி ஒன்று.
3) கடவுச்சீட்டின் விவரக்குறிப்புகளுக்கு இணங்கியதான (3.5 செ.மி. X 4.5 செ.மி.) அளவு கொண்ட சமீபத்திய வர்ணப்புகைப்படம் அல்லது எமது நிலையத்தில் கட்டணமின்றி படமெடுக்கவும் முடியும்.
4) பிற்கொடுப்பனவு குரல்வழி தொடர்புகளுக்கான அல்லது அகன்றபட்டைத் தொடர்புகளுக்கான அறவீட்டுப் பட்டியலின் உறுதிச் சான்று.
5) கம்பனிக்கான கீழ்வரும் தொடர்புகளு கம்பனியின் கடிதம்.

குறிப்பு :

உங்களிடம் தே.அ.அ இல்லையெனில் உங்கள் பெற்றோருடன்/பாதுகாவலருடன் வருதல்வேண்டும். அத்துடன் உங்கள் பெற்றோரின் /பாதுகாவலரின் 1-3 வரையுள்ள ஆவணங்களையும் கொண்டு வருதல்வேண்டும்.

மேலே 22-இற்கு இணங்கியதான சமீபத்திய புகைப்படம் உங்களிடம் இல்லையாயின், எமது நிலையத்தில் கட்டணமின்றி புகைப்படம் ஒன்றை எம்மால் எடுக்க முடியும்.

4. எங்கு பதிவு செய்து கொள்ளலாம்?

புதிய மற்றும் தற்போதைய சந்தாதாரர்கள் அனைவரும் பின்வரும் நிலையங்களில் பதிவு மற்றும் மீள்பதிவு செய்யலாம்.

- மொபிடெல் கிளைகள்
- SLT ரெலிகொம்
- SLT பிராந்திய தொலைத்தொடர்பாடல் அலுவலகங்கள்
- சிங்கர் மெகா
- தெரிவு செய்யப்பட்ட அதிகாரமளிக்கபட்ட மொபிடெல் முகவர் நிலையங்கள்
- ஆர்ப்பிகோ சுப்பர் சென்ரர், ஹைட் பார்க் கோனர்.

5. நான் பதிவு செய்த பின்பு எனக்கு அறிவிக்கப்படுமா?

ஆம். பதிவு வெற்றிகரமாக நிறைவேறியபின், SMS மூலம் உங்களுக்கு அறிவிக்கப்படும்.

6. பதிவு செய்வதன்மீது சான்றிதழ் ஒன்று எனக்கு கிடைக்குமா?

ஆம். பதிவு செய்தவுடன் தற்காலிக மொபிடெல் அடையாள சான்றிதழ் உங்களுக்கு கிடைக்கும். அதன் பின்னர், உங்கள் நிரந்தர மொபிடெல் அடையாள சான்றிதழ் உங்கள் பதிவுசெய்யப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்.

7. நான் தற்சமயம் பிரயோகிக்கும் SIM-இன் மொபிடெல் டிஜிடல் சான்றிதழை எவ்வாறு பெற்றுக்கொள்ள முடியும் ?

டயல் செய்க #132# SEND

- கையடக்கத் தொலைபேசி இல
- பெயர்
- தே.அ.அ இல
- SIM இலக்கம்

ஆகியவை உங்களுக்கு கிடைக்கும்.

<u>பல்லினம்</u>

8. எனது தேசிய அடையாள அட்டை/இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்/செல்லுபடியாகும் கடவுச்சீட்டில் காணப்படும் முகவரியிலிருந்து எனது தற்போதைய முகவரி மாறுபடுமானால் என்ன நடக்கும்?

அதுபற்றி அலட்டிக் கொள்ள வேண்டாம். நீங்கள் தற்போது வாழும் முகவரி கொண்டு, உங்கள் SIM ஐ பதிவுசெய்ய முடியும்.

9. நான் ஒரு இலங்கையர் அல்லர் நானும் பதிவு செய்ய வேண்டுமா ?
ஆம். மேலுள்ள 3-இல் காணப்படும் அதே செயல்முறையை நீங்களும் பின்பற்ற வேண்டும்.

10. நான் கொள்வனவு செய்த இடத்தைவிட வேறு இடத்தில் SIM-ஐ நான் பதிவு செய்ய முடியுமா?
ஆம். மேலே 4-இல் குறிப்பிடப்பட்ட எந்த ஒரு இடத்திலும் பதிவு செய்யலாம்.

11. என் சார்பில் வேறொருவர் மூலம் எனது SIM ஐ பதிவு செய்ய முடியுமா ?
முடியாது. அடையாளத்தை உறுதிப்படுத்த நீங்கள் நேரில் வரத்தான் வேண்டும்.

12. என்னிடம் பல மொபிடெல் ளுஐஆகள் உண்டு. அவை எல்லாவற்றையும் பதிவு செய்ய வேண்டுமா?
உங்கள் பெயரில் பல SIM கள் பதிவு செய்யப்பட்டிருப்பின், நீங்கள் தற்போது சகலவற்றையும் பயன்படுத்தாது இருக்க வாய்ப்புண்டு.
அத்தகைய SIM கள் வேறு ஆட்களால் பயன்படுத்தப்படுமாயின் அவர்களின் பெயர்களில் அவற்றை பதிவு செய்து கொள்ளுமாறு அவர்களிடம் தயவுசெய்து கேட்டுக் கொள்ளுங்கள்.
எவ்வாறாயினும், நீங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட SIM -ஐ சிற்சில காரணங்களுக்காக எப்பொழுதும் கொண்டு செல்வதாக இருந்தால், அவை ஒவ்வொன்றையும் வெவ்வேறாக பதிவு செய்தாக வேண்டும்.

13. நான் ஒரு வலையமைப்புடன் ஏற்கெனவே பதிவு செய்துள்ளேன். எனது மொபிடெல் இணைப்புக்காக மொபிடெல்லுடன் பதிவு செய்துகொள்ள வேண்டுமா ?
ஆம். உங்கள் மொபிடெல் இணைப்புக்கு மொபிடெல்லுடன் நீங்கள் பதிவு செய்து கொள்ளவேண்டியது அவசியம்.

14. பதிவு செய்யப்பட்ட எனது SIM –ஐ இழந்துவிட்டேன். எனது புதிய SIM –ஐ மீள்பதிவு செய்ய வேண்டுமா?

இல்லை. உங்கள் முன்னைய இலக்கம் பற்றிய உங்கள் பதிவுத்தகவல் எமது வலையமைப்பில் ஏற்கெனவே கிடைக்கக் கூடியதாக இருப்பதனால், உங்கள் SIM அதே இலக்கத்துக்காயின் நீங்கள் அவ்வாறு செய்ய வேண்டியதில்லை. எனினும் புது MIC ஐ பெற்றுக்கொள்ள எமது நிலையத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

**பதிவு செய்யாதவிடத்து ஏற்படும் விளைவுகள்**
இலங்கை அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட ஒழுங்கு விதிமுறைப்படி ஒவ்வொரு சந்தாதாராரும் கட்டாயமாக பதிவு செய்தாக வேண்டும். எந்த ஒரு சந்தாதாரரும் தாம் கொண்டு செல்லும் SIM-இல் தனக்குரிய உரிமையை உறுதிப்படுத்த தவறுமிடத்து, நாட்டின் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக நடந்து கொள்ளாமைக்காக குற்றம் சாட்டப்படும்.

# பின்னிணைப்பு 3

## முற்கொடுப்பனவு பதிவு/மீள்பதிவு விண்ணப்பப்படிவத்தின் மாதிரி.

Sri Lanka Telecom Mobitel — We Care. Always.

**SMART பேர ගෙවීම් සඳහා ලියා පදිංචි වීමේ/නැවත ලියා පදිංචි වීමේ අයදුම්පත**
**பதிவு/மீள்பதிவு செய்வதற்கான SMART முற்கொடுப்பனவு விண்ணப்பம்**
**SMART PRE-PAID APPLICATION FOR REGISTRATION / RE-REGISTRATION**

விண்ணப்பதாரியின் நிழற்படம் / Photograph (3.5cm x 4.5cm)

1. தே.அ.அ அல்லது கடவுச்சீட்டில் குறிப்பிடப்பட்டவாறு பெயர் (வண/சங்/டாக்டர்/திரு/திருமதி/செல்வி)
Name as stated in NIC or Passport: (Ven/Rev/Dr/Mr/Mrs/Ms)
JAYAMAHAAGE MALITH BANDARA

2. தே.அ.அ இல/கடவுச்சீட்டு இல (இலங்கையர் அல்லாதோர்)
NIC No / Passport No (For Non Sri Lankan Nationals): 810493356V — நாடு / Country:

3. கம்பனியாகின், அதன் பெயர்/பாவனையாளர் சிறுவனாக இருப்பின், அச்சிறுவனின் பெயரைக் குறிப்பிடுக
If Company, Specify Company Name / If user is a child, specify child's name:

4. நிரந்தர முகவரி
Permanent Address: NO: 228/1A RUHUNU ROAD DEHIYATTAKANDIYA
மாவட்டம்/District: AMPARA
மின்னஞ்சல்/E-mail:
தொலைபேசி இல/Telephone No: 063-330550

5. தொழில் / Occupation

| அரசாங்கம் Government | தனியார் Private | சுயதொழில் Self Employed | மாணவர் Student | ........ |
|---|---|---|---|---|
| ✓ | | | | |

6. மாதத்தில் தொடர்பாடலுக்கென நீங்கள் செலவிட விரும்பும் தொகை (ரூ)
Amount you are willing to spend on communication a month (Rs.):

| 100-க்கு கீழ் Below 100 | 100-250 | 250-500 | 500-1000 | 1000-3000 | 3000 க்கு மேல் Above 3000 |
|---|---|---|---|---|---|
| | | ✓ | | | |

7. குடும்பத்தில் எத்தனைபேர் கையடக்கத் தொலைபேசிகளை பயன்படுத்துகிறார்கள்
Number of members in the family using mobile phones: 2
குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை / Number of family members: 5

8. தொடர்பாடலுக்கு விரும்பும் மொழி
Preferred Language of Communication:

| சிங்களம் Sinhala | தமிழ் Tamil | ஆங்கிலம் English |
|---|---|---|
| ✓ | | |

9. மோபிடெல் இல./Mobitel No: 0713281106
10. சிம் இல/SIM No: 89940112111930336500
11. தற்காலிக MIC சிம் தொடர் இல/Serial Number of the temporary MIC: 2345678

I/We declare that the information given by me/us is true and correct. I/We have read and understood the terms and conditions overleaf and duly filled this application and hereby agree to be bound by the said terms and conditions.

வாடிக்கையாளரின் ஒப்பம்/Signature of Customer: [signature]
திகதி/Date: 01/08/2008

**விற்பனையாளரின் கூற்று**

நான்/நாம் கீழே தரப்பட்டுள்ள தகவல்களை சரிபார்த்துக் கொண்டுள்ளேன்/கொண்டுள்ளோமென இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்/உறுதிப்படுத்துகின்றோம்.

| | | ஆம் | இல்லை |
|---|---|---|---|
| 12. | தே.அ.அ/கடவுச்சீட்டு/சாரதி அனுமதிப்பத்திரம் சரிபார்க்கப்பட்டுள்ளது | ✓ | |
| 13. | வாடிக்கையாளரின் புகைப்படம் எடுக்கப்பட்டது | ✓ | |
| 14. | இணைக்கப்பட்டுள்ள புகைப்படம் வாடிக்கையாளரின் முகத்துடன் ஒத்ததாக உள்ளது | ✓ | |

15. உப முகவர்/விற்பனையாளரின் பெயரும் முகவரியும்: MOBILE TELECOM (PVT) LTD NO: 123, MAIN ROAD DEHIATTAKANDIYA

16. முகவரின் குறியீடு: PMTL — 17. உப முகவர் குறியீட்டெண்: AMP00001

18. இணைப்பிற்கு பயன்படுத்தப்பட்ட இல: 0713281107

19. 752191298V
உப முகவரின்/விற்பனையாளரின் தே.அ.அ இல

SMART

ஒப்பம்/கையொப்பம்: [signature] — திகதி: 01/08/2008

Version

# பின்னிணைப்பு 4

# பிற்கொடுப்பனவு பதிவு3மீள்பதிவு விண்ணப்பப்படிவத்தின் மாதிரி

Sri Lanka Telecom Mobitel
We Care. Always.

## POST-PAID APPLICATION FOR REGISTRATION/RE-REGISTRATION

A digital photograph of you will be taken at our Center at no cost. If you do not wish to be photographed at the Center, you should be present in person and provide your photograph, conforming to the specifications of the Passport (Size:3.5cmX 4.5cm) photograph

**Personal Information of the owner** (Please fill in block letters) (Information marked by Asterisks (*) are compulsory)

1 Mr. ✓ Mrs. Ms. Dr. Rev. Other:

2 Name with Initials (Name on the bill will appear as mentioned above) Y. M. SIVANKARA *

3 Name as in NIC or Passport YASAS MUDIYANSELAGE SIVANKARA *

4 NIC No./Passport No. (For Non Sri Lankan Nationals) 811360678V Country

5 Billing Address (If the billing proof is not produced the credit limit will be equal to your refundable deposit)
NO: 23/1A, SIR RICARDO HADLEE MW *
COLOMBO 06 District

6 Permanant Address
NO: 02, SEA STREET AMBALANGODA
District GALLE

7 Contact Details Home(Tel) 0112330550 * E-mail Sivym@gmail.com
Office(Tel) 0112330551 Fax 0112330396

8 Person to be contacted. (In case we are unable to contact you) Name: I. AMARASURIYA
Contact No. 2507385

9 Preferred language for communication ✓ English Sinhala Tamil *

10 **Company Details** Company Name Business Registration No.
VAT Registration No. (If a VAT invoice is necessary please include the VAT registration No.)

11 **User Details (If the current user is not the owner of this connection or is a child)**
User's Name
NIC Number
Current Address

Signature: ……………………

### Mobile Details

12 Mobitel Number 0712755777 Account No. Group Code

13 SIM No. 8994011211119303365 0

14 Serial Number of the temporary MIC : 7234567

15 **Voice/Video** ✓ Tariff Plan DOUBLE M1000 *
**Other Services** ✓ Detailed Bill (O/G only)

16 **Mobile BroadBand** Tariff Plan
**Other Services**

17 **Payment Method** 1) SMS Payments ✓ 2) On line Payments 3) Credit card standing instruction

18 **Refundable Deposit**
Local Call/IDD Deposit
Value 2000
Receipt No. 1219999

### Other Information

19 Amount you are willing to spend on communication a month (Rs.): Rs. 100 - 490 Rs. 500 - 999 ✓ Rs. 1000 - 4999 Above Rs. 5000

20 Occupation (Please attach your business card) Government ✓ Private Self Employed Student

### Other Information

21 **Professional Membership** Professional Body ………… Membership Status Student Associate/Regular Corporate Senior

22 Number of members in the family using mobile phones 2 Number of family members 5

### Declaration

I/We confirm that the information provided is true and correct. I/We also confirm that I/we have read the terms and conditions overleaf and are bound by them.

Date (DD MM YYYY) 01 08 2008 Signature: [signature] Rubber Stamp (If Company): …………

### Seller's Statement

I/We hereby declare the information given below have been verified by me/us.

23 Checked NIC/Passport/Driving License Yes ✓ No
24 Photograpgh of the Customer was taken Yes ✓ No
25 Customer's face matches the Photograph Yes ✓ No

26 Name and Address of Dealer/Seller: XYZ COM (PVT) LTD
NO: 25 MAIN ROAD
COLOMBO 03

27 Signature [signature] Date 01/08/2008 NIC Number of Dealer/Seller 768621837V

### Office Use Only

Credit Limit: 1) VIP 2) Referral based 3) Deposit based 4) Evaluation based

1) For VIP customers: Description ……………
2) Referred by (Mobitel staff member)

Name: …………… Designation: …………… Division: ……………

Activated by: …………… Date: ……………

**Mobitel (Pvt.) Ltd.**, 108, W.A.D Ramanayake Mawatha, Colombo 02. Hotline 0712755777, Fax - 2330396, Website - www.mobitel.lk